Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 26உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஞூ கார்த்திகைமீ அஉ வெள்ளிக்கிழமை 23 November. 1962) [இல-நடந]

உலகியல் அலை

# பீகிங் சராசங்கம் பேய்காட்டுகிறதா

—————:0:—————

## தான் சொன்னபடிதான் நடக்கவேண்டுமாம்!

———0———

### ஆரம்ப சூரரின் வீரம் வெறுமையே!

பதுங்கியிருந்து பாய்ந்து சில கட்டை தூரத்தை அபகரித்துவிட்டுப் பகற் கொள்ளையை மூடி மறைத்துப் பத்தா பூலோகமாக என்று பாசாங்கு செய்து முன்னில்லாத மதிப்பைப் பெற்றுவிடலாமென்று சூ என்லாயும் சூழ்ச்சி செய்தவண்ணமாயிருக்கின்றூர்

பழைய இடத்துக்குப் போவோம் என்று அழைக்கிறூர் இரத்தவெறி கொண்ட இரத்தப் படைச் சீனத் தலைவர். அந்த இடம் எங்கேயிருக்கிறது. 'புளியடி புளியடி' என்று விளையாட்டுப் பிள்ளைகள் சொல்லும் இடமா?

மாக்மோகன் எல்லைக்கோடு சரியானதல்ல, சீனுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல என்ற விதண்டா வாதம் ஒரு பக்கம் இருக்கட்டும். அந்த அடாதவலுச் சண்டையைச் சரியென்று எடுத்துக்கொண்டாலும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுதாஞ இவர்கள் கண்டவழி?

ஐக்கியநாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுக்கொண்ட பின்பு அடக்கமான, சமாதானமான முறையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதா?

அதைவிட்டு, அந்த நல்ல வழியில் தனக்கு இடம் கிடைக்கப் பாடுபட்டுவந்த, இன்னும் பாடுபட்டுவரும் ஒரு சகோதர நாட்டிற்கு, நேசக்கரம் நீட்டி நிற்கும் நாட்டிற்குச் செய்யப்படும் அரக்கத்தனமான அரோகம் சீனுவுக்குப் புதிய அநுபவமல்ல.

அதன். நில வெறியை, நாடு பிடி சண்டித்தனத்தை அதன் முந்திய கொடிய வரலாறு கூறும். அதன் வரண்டுவிட்ட பொருளாதாரத்தை, அதனுல் இந்தியாமேல் ஏற்பட்ட பொருமையை, அந்தநாட்டின் மக்களிடையே சமத்துவ ஏகாதிபத்தியம் பரப்பிவிட்ட சோம்பல் தத்துவங்களும் பொருமையுணர்ச்சிகளும், உள்ள வளர்ச்சியைக் கொன்று ஏற்படுத்தப்படும் உடல் வெறிகளும் சொல்லும்.

அறத்தில் நம்பிக்கையில்

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

## நாவலர் திருநாள்

சென்ற திங்கட்கிழமை புன்னாலைக்கட்டுவன் மெதெடிஸ்த ஆங்கில பாடசாலை மண்டபத்தில் சைவ சமய பாடப்பொறுப்பாளர் திரு. க. க சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நாவலர் பெருமானின் குரு பூசை ஆரம்பமாயது.

பள்ளிக்கூட அதிபர் திரு. மூ. குமாரசுந்தரம் அவர்கள், பேர்சிவல் நாவலர் தொடர்பு கூறி, இங்கு இவ்விழா எடுப்பது சாலப் பொருந்துமென ஆரம்ப உரை நிகழ்த்தினர். பின்பு வயவை மத்திய கல்லூரிப் பண்டிதர் திரு K. முருகேசு அவர்கள் "நாவலர்காட்டிய நன்னெறி" என்ற பொருளில் பேசுகையில் வசன நடையின் தந்தையான நாவலர் சைவமும தமிழும் வளர, ஐம்பத்தொன்பது புத்தகங்களை அச்சுவாகனம் ஏற்றியதையும் குறிப்பிட்டார். திரு. செ. சிவசம்புநாதன் கூறிய நன்றி உரையுடன் பூசை நிறை வெய்தியது.

——

## நற் சிந்தனை

அணங்கு தந்தெமை
ஆட்டும் மனத்தை
இணங்காம லெந்தை
யிணையடி பணிகுறும்.

## கருத்துக் கலசம்

தனிநபரின் நிலையைத் தாழ்வு படுத்தாமல் ஜனநாயகமுறையில் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும் என்பதை இந்தியா காட்டவிட்டு விட்டால், ஏனைய ஆசிய நாடுகளும் அந்த நல்ல வழியால் கவரப்பட்டு, அதைப் பின்பற்றத் தொடங்கிவிடும்.

அதனுல் சீனுவின் தற்போதைய கொள்கைக்கு மாற்றம் ஏற்பட்டுவிடும் என்ற பயமே சீனு இந்தியாவை அழிக்க நினைக்கும் படையெடுப்பிற்குக் காரணம்.

—பி. கே. நேரு.

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்றும்
அணிகிளரு முருமென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமேணிவயிரக்கோவைதோன்றும்
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்மும்
செக்கர்வானுளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்பேட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனர்க்கே,

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருனுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## ஆதி பகவன்

———:0:———

முப்பால் மொழிந்த முதற் பாவலர் உலகுக்கு உணர்த்துவன மூன்றுகும். அவையே உலகம், உலக முதற்பொருள் (கடவுள்) அவற்றை உணரும் உயிர் என்க. உயிர் நலம்பெற அமைந்ததிவ்வுலகம். உலகில் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையுந் தெய்வமாவார். உலகில் உயிர் வாழவேண்டுமெனில் உலகு ஒளிபெறல் வேண்டும். அங்ஙனம் ஒளி பெருதொழியுமேல் உயிர்கள் செயலின்றி ஒடுங்கும்.

உலகில் இயற்கையும் செயற்கையுமாக ஒளி கொடுத்து விளங்குவ பல. அனைத்திலும் சிறந்து, இணையென ஒன்றின்றி, உலகினுக்கொன்ருய் ஒளிர்வது கதிரவனே. கதிரவனைக்கண்டால் கடல் ஞாலம் மகிழும். அதன் வரவால் விளையும் அளப்பரிய பயன் நோக்கி அதனைப் பலரும் புகழ்வர். அதனுலன்றோ "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ்ஞாயிறு" என்றூர் நக்கீரர்.

கதிரவன் ஒன்றுமட்டும் இல்லையானுல், அம்மம்ம இவ்வுலகம் எவ்வளவு இடர்ப்படும். கதிரவன் மறைந்த சிறுபொழுதாம் ஓர் இரவிலேயே எவ்வளவோ

**வித்துவான்,**
**திரு. அமுதலிங்கம்**

பொருளிழப்பும், நலக்குறைவும், குணக்கேடும் விளையுமென்றுல் கதிரவனே இல்லையேனில் வருகின்ற தீமைகட்கோர் வரம்பிடவும் ஆகுங்கொல்? ஆகாமையின் கதிரவன்வாழும் உயிர்க்கோர் வாழ் முதற் பொருளாம் என்க. எனினும் ஞாயிறு ஒன்றுமட்டுமே மக்களுக்கு வாழ்வளிக்க வல்லதூஉம் அல்ல.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## கல்லும், கனியும்

இரக்கம் முதலிய நற்பண்புகள் இல்லா மனிதரின் மனதைக் கல்லுக்கு உவமானமாகக் கூறுவார்கள். நல்ல பண்புகளுக்குக் காரணம் இறைபக்தி. இறைபக்தி இல்லா மனம் கல்போன்றது. கல்லினும் பார்க்க கடினமுடையது என்பது தாயுமான சுவாமிகள் கருத்து.

"கல்லேனுமையவொரு காலத்தில் உருகுமென் கன்னெஞ்சமுருகவில்லையே" என்பது தாயுமான சுவாமிகள் வாக்கு மிகக் கடினமான கல்லென்பதைக் காட்டத் "திணியானமனுேசிலை" என்றூர் அருணகிரியார்.

நெஞ்சத்திலேஉள்ளபெரிய கல்லை, யாவராலும் விரும்பப்படும் கனியாக்கி விட்டால் மனித வாழ்க்கையின் இலட்சியம் கைகூடிவிடும். கல்லா

**ஸ்ரீ வ. குகசர்மா**

னது தன் பாரத்தினுலே தம்மைச் சேர்ந்தாரைத் துன்பமாகிய நீரில் அழுத்திவிடும் திருநாவுக்கரசு சுவாமிகளை கற்றுணைப் பூட்டிக் கடலிலே வீழ்த்தினுர்கள். ஆனுல் சுவாமிகள் துன்பம் கொண்டு நீரில் ஆழ்ந்துபோகவில்லை கல்லின் பாரத்தைக் குறைக்கும் வழியறிந்தவர் அவர். அந்த வழி வேறென்றுமில்லை, இறைவன் நாமம். இதனை அவர் தம் வாக்கினுலே எமக்கு அறிவுறுத்துகின்றூர்.

"கல்லினேடெனைப்
பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக
நூக்கஎன் வாக்கினுல்
நெல்லு நீள்வயல்
நீளக் குடியரன்
நல்ல நாமம்
நவிற்றிஉய்ந் தேனன்றே"

இந்த வழியை வேறு பல அடியார்களும் வற்புறுத்தியுள்ளார்கள், கந்தர் அநுபூதி பாடினுர் அருணகிரியார். அவர்தாம்பாடும்காரணத்தை நூல் ஆரம்பத்திலேயே கூறிவிடுகிறூர். "நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துருகத், தஞ்சத்தருள்சண் முகனுக் கியல்சேர் செஞ்சொல் புனைமாலை" பாடுவதாக அவர் கூறுகிறூர்.

இவ்வாறு தியானத்தாலோ அல்லது தவம் முதலியவற்றுலோ, இறைவன் மனதிலே நிலைபெற்றுல் நெஞ்சக்கல் இனியகனியின் தன்மை பெறும். சூரபன்மன் மாபெரும் தவங்கள் செய்தவன். ஆனுல் அரசு

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## நாத வெளியிலே!

★

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: சண்முகப்ரியா :: தாளம்: ரூபகம்

பல்லவி

அம்பல வாணனை நம்பி யிருந்தால்
அல்ல லில்லை யே — தில்லை (அ)

அனுபல்லவி

சம்பூ ரணியோடு தாண்டவ மாடி
சந்ததம் தூக்கிய தாளினைப் சாடி (அ)

சரணம்

சமய நெறிகளில் சாதனை தேறி
சாத்வீக மாசிய தவமலை யேறி
"நமசிவ ய" என்று நாவமிழ் தூறி
நாத வெளியிலே நாமினைப் பாறி (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஹு கார்த்திகை மீ அ உ வெள்ளிக்கிழமை

## ஓங்கும் கைக்கு உலகம் பணிவதா?

எல்லைப் புறத்தில் இரகசியமாக நுழைந்து சொல்லொன்று செயலின்ஞென்ருக அபகரிக்கும் அடாத தொழிலில் ஈடுபட்டிருந்த செஞ்சீன வெளிவந்து பழிபாதகப்பெரும் போர் நடத்தத் தொடங்கி நாட்கள் பலவாகிவிட்டன. ஆனல் உலகம் இந்த வஞ்சகப் பழிச்செயலைக் கண்டித்து நீதியை நிலைநாட்ட இன்னும் முன்வரவில்லை. இதன் கருத்தென்ன? உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்பது வழக்கு இக் கருத்தை விரித்துரைக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பே உலகம் என்று பொருள்படும். ஐ. நா. என்ன செய்கின்றது, என்ன செய்ய எண்ணுகின்றது என்ற கேள்விகளை உலக மக்கள் கேட்ட வண்ணமாயிருக்கின்றனர். ஆனல் நடப்பதொன்றுமில்லையே!

ஓங்கும் கைக்கு உலகம் பணிவதா? அல்லது ஒழுக்க நெறியில் நாடுகள் நின்று மனிதப் பண்பின் மாண்பைக் காப்பாற்றத் தலைநிமிர்ந்து கடமை புரிவதா?

சீன தானடங்காதவகையில் நானில நாட்டாண்மை நடத்தத் துணிந்திருப்பதை இன்று நேற்றல்ல எத்தனையோ ஆண்டுகளாக உலக மக்கள் உற்று நோக்கி வருகின்றனர். இந்துநேசியா, தாய்லந்து, வியற்நாம் மலேயா, கொரியா தீபெத்து ஆகிய எல்லைப் புறங்களில் எல்லாம் தொல்லை விளைவித்து ஆங்குட் புகுந்து ஆதிக்கம் நடத்தியபடி அபகரித்து உருசி கண்ட செஞ்சீன எஞ்சிய இந்திய எல்லையிலும் கை ஓங்க விடப்பட்டால் உலகம் ஒழிந்துவிடும் என்று சொல்லவும் வேண்டுமா? உலக அமைதிக்கு உழைக்கும் வல்லரசுகளுக்கெல்லாம் பரம எதிரியாக இருப்பது செஞ்சீன. அவ்வாறு ஒழுங்குக்கு ஒவ்வாத ஒரு நாட்டின் கை ஓங்க விடுவது மனித சமுகத்துக்குத் துரோகஞ் செய்வதற்கொப்பாகும் அன்றே? பனிமலைப் பகுதிப் பயங்கர யுத்தத்தின் விளைவு மனித இனத்தையே அழிக்கும் தன்மையதென்பதை ஐ. நா. வும் ஏனைய நாடுகளும் அறிதல் வேண்டும். அமெரிக்கா இங்கிலாந்து சர்மானி பிரான்சு ஜப்பான் மட்டுமன்று; உருசியாவும் செஞ்சீனத்தின் நோக்கத்தை ஆராய்ந்து உணர்தல் வேண்டும். உணருவார்களேயானல் உலகம் உய்யும்; ஓங்கின கைக்கு ஒதுங்கிப்பணியாது.

## ஆருக்கு முறையிடுவோம்....

—0—

புலவர், திரு. சி. சின்னையா

தேன்வாழ் புதுமலர்த் தண்டகுச் சாலஞ் செறியுமெழிற்
கான்வாழ் திருத்தேன் கதிரையில் வாழ்வுறுங் கந்தநினைக்
கேன்வாள் பிரதம ரீந்தார் மொழிக்கு மெமக்குமிடர்
தான்சூழ் வதற்கொரு கைக்கூலி யோவுண்மை சாற்றுதியே.

விடுவேன் தமிழுக் குயிரேன்று நெஞ்சு விறைக்கக்கையால்
இடுவோ ரடிதமிழ் கற்றவர்க் கேது மிதங்கள்செய்யார்
படுபா தகர்தமிழ்ப் பண்பாடு கெட்ட பலரிவராற்
கெடுவாள் தமிழன்னை யந்தோ கதிரைக் கிரித்தெய்வமே.

தமிழுக் குயிர்விடு வேனெனச் சாற்றுவர் தண்டமிழனால்
அமிழ்தைப் படித்துக் கவிதைக ளாக்கு ம ர்களையோர்
நிமிடப் பொழுதுங் கவரவி யார்பின்னை நிந்தைசெயுந்
திமிருக் கொருதனிச் சிங்களச் சட்டம்வந் திட்டதுவே.

பாரதி யாருக்கு மண்டபங் கட்டினர் பண்டவருந்
தாரமுந் தந்துள பிள்ளைக ளுந்தவித் திட்டபொழு
தாரொரு பேரவர்க் காதர வீந்தவ ராழ்கடலின்
நீர்புடை சூழல கீதொரு சாப நிகழ்ச்சியதே.

ஆங்கிலங் கற்றர சாங்கப் பணிபுரிந் தானபொருள்
தாங்கள்பெற் றுலது தீதன்று செந்தமிழ்த் தாயினருந்
தீங்கனி பானறுந் தேனுகு மின்சுவைத் தித்திப்புணர்ந்
தாங்கதை யாதரி யாதவர் தாயிற்பற் றற்றவரே.

ஆயும் பொருணயஞ் சொன்னயந் தேங்கநன் ருக்கிடினுந்
தோயுந் தமிழ்க்கவி சொல்ல வரார்பிறர் சொல்லுகினும்
ஏயுஞ் செவிமடுத் தோரார் குறுமுனிக் கித்தமிழைத்
தாயின் மொழிந்தருள் வேலோ னிவர்க்கருள் தந்திடுமோ.

ஆருக்குச் சொல்லி முறையிட லாமென் றயில்பிடித்துப்
போருக்குச் சென்றசு ரேசனை வாட்டிப் புரந்தரற்கன்
றாருக்குப் போகு மூர்த்தினை யீந்தரு ளூர்திமயி
லாருக்குத் தான்முறை யிட்டேன் புரிவ தறிகுவமே.

கால முகின்மழை பெய்தா லெனக்கவி கட்டுரைத்த
சீல நவாலித் திருச்சோம சுந்தரச் செம்மலுக்கன்
றேல விழாவெடுத் தம்பொற் கிளியளித் திட்டனரோ
பாலையும் மோரையு மொன்றுய் மதிக்கின்ற பண்பினரே.

நல்லைக்கீர்த்தனம் — 22.

## ஆருக்கும் சொல்லாதே!

☆

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : கரகரப்பிரியா : தாளம் : ஆதி

பல்லவி

ரகசியம் கேளடி — சகியே
அவசியம் நேர்ந்தாலன்றி ஆருக்கும் சொல்லாதேயடி

அனுபல்லவி

நமசிவாயப் பொருளின் நாதன்கைலை வாசன்தந்த
பவசிவ குருநலலைப் பாலசுப்ர மண்யன்சொன்ன

சரணம்

அத்துவித வேதமெல்லாம் ஆறுமுகம் என்றுனடி
சித்துமலர்ப் போதமெல்லாம் சிவபோதம் என்றுனடி
தத்துவ மெல்லாங்கடந்து தானேஒன்றுய் நின்றுனடி
பித்துக் குளிச்சரவணன் முத்துக்குமரையன் சொன்ன.

நேயர்கள் நெஞ்சம்

### திருமலைக் கோணேசர்

## கும்பாபிடேகம்

—0—

27—10—62 சனிக்கிழமை அன்று வெளிவந்த "ஈழநாடு" பத்திரிகையில் திருமலை கோணேசர் ஆலய கும்பாபிஷேகம்பற்றிய விஞ்ஞாபனத்தைக் கண்ணுற்றேன். அதில் புலவர் அவர்கள் காட்டிய கும்பாபிஷேகம் நியமிக்கப்பட்ட அம்முகூர்த்தத்தில் ஒரு சில தோஷங்கள் காணப்படுகின்றன.

கும்பாபிஷேகமென்றல், பொதுநலங்கருதிச் செய்யப்படும் ஓர் கிரியையாகும். அது அக்கோயில் ஸ்தாவிகர்களுக்கும், அக்கிராமவாசிகளுக்கும் இன்னும் பலருக்கும் நன்மை பயக்கக்கூடியதாக ஓர் நல் முகூர்த்தத்தில் அதனைச் செய்து நிறைவேற்றுதல் வேண்டும். புலவரால் குறிக்கப்பட்ட அம்முகூர்த்தமானது வருஷ அந்தமும், மாத அந்தமும் ஆகிய தோஷங்களையுடையது. இனி, இக்கும்பாபிஷேகம் முதன் முதலாகச் செய்யப்படும் அனுவர்த்தன கும்பாபிஷேகமாகும். [அன்றைய நட்சத்திரமான பூச நட்சத்திரமும் இந்த அனுவர்த்தன கும்பாபிஷேகத்திற்கு விலக்கப்படும் ஒன்றுகக் கருதப்படுகிறது.]

அதனை நன் முகூர்த்தத்திற் செய்தால் எவருக்கும் நன்மை பயக்குமென்பது, ஆகமநூற்றுணிபு. காமிகம், காரணம் இன்னும் பல ஆகமங்கள், எல்லாம் வருஷாந்தம் மாதாந்தம் ஆகிய இவற்றைத் தள்ளி நல்ல சுபவேளையில் செய்ய வேண்டுமென்று முறையிடுகின்றன. ஆதலால் புலவர் அவர்களும் அக்கும்பாபிஷேகக் குழுவினரும் மற்றையோரும் இதனை உணர்ந்து கொள்ளல் வேண்டும். இம்முகூர்த்தத்தை நோக்கி, அடுத்த வருடம் வரும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணிகளில் மத்திமமாகவாவது ஒரு முகூர்த்தத்தை வைத்து, அக்கும்பாபிஷேகத்தை நிறைவேற்றினல் கிராமவாசிகள் முதலாகிய சகலரும் பெரும் நன்மையைப் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன். பஞ்சாங்ககாரர் பஞ்சாங்கத்தில் இம் முகூர்த்தத்தைக் குறித்திருக்கிருர்கள் தானே; ஏன் அந்நாளை ஏற்கக்கூடாது என்று சிலர் கேட்கக்கூடும். அவர்கள் சோதிடர்கள். அதனுல் சோதிட நூல் உணர்ச்சியோடு மாத்திரம் இதனைக் குறிக்கின்றனர், அவர்கள் ஆகம நூல் உணர்ச்சியோடு குறிப்பின், இப்படிக் குறித்திருக்கமாட்டார்கள். இதையெல்லாம் நன்கு அறிந்து கொள்வது நலம்.

ஆ. சி. இரத்தினசபாபதி,
நல்லூர்.

# பிழையைக் கண்டிக்கப் பின்னிற்காத பெரியார்

[யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் ஆதரவில் **19-11-62** திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் பண்டிதர் பிரம்மஸ்ரீ. வ மு இரத்தினேஸ்வரஐயர் தலைமையில் நடைபெற்ற நாவலர் குருபூசை விழாவின்போது சைவப்புலவர் திரு வ, கந்தசாமி ஆசிரியர் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் ]

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி
தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க
ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க
ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர்
தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது
தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப்
பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை
தொழிலென் றேரதும்
மதம் பூத்த விநாயகன்ருள்
வணங்கி வாழ்வாம்.

(நாவலர் பெருமான்)

சமயகுரவர் நால்வருக்குப் பின் ஐந்தாங்குரவராக ஆறுமுகநாவலர் அவதரித்தார். அப் பெருமானின் குருபூசை விழாவினைச் சிறந்த முறையில் கொண்டாட வேண்டியது சைவ - தமிழ்மக்களின் தலையாய கடனுகும். நாவலர் பெருமானின் சரித்திரவரலாற்றை ஆராயும்போது அவர் நமக்குக் காட்டிச் சென்ற வழிகள் பல உள. அவற்றுள் சிலவற்றை இங்கு சிந்திப்பாம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர் நாவலர் பெருமான். அக் காலம் கிறீத்தமதம் தலை தூக்கிய காலம். பணத்துக்காகவும் பட்டத்துக்காகவும் சைவசமயத்தை விட்டு கிறீத்துமதப் மாறிய காலச் சூழ்நிலையிலே நாவலர் அவதரித்தது எங்கள் அதிட்ட வசமே என்று கூறலாம்.

நாவலர் பெருமான் போதனையில் மாத்திரம் நின்றுவிடவில்லை. சாதனையிலும் வாழ்ந்து காட்டியுள்ளனர். காலச் சூழ்நிலையிலே எதனை முதற் செய்ய வேண்டுமோ அதனை முதற் செய்தவர் நாவலர். இன்று நாவலரின் வாழ்க்கை முறையினை வானளாவப் பேசுகின்ருர்கள், எழுதுகின்ருர்கள். ஆனல் சாதனை முறையில் செய்பவர் மிகச் சிலரே. நாவலரின் கொள்கைகளையும் — குறிக்கோளையும் அறியாது இன்றும் நம்மிடைபே பலர் வாழ்கின்றனர். சைவசமயத்தின் சீரிய நெறியை இளமை முதல் மாணவர் கற்பதற்கு நாவலரால் ஆக்கி அளிக்கப்பட்ட சைவ வினுவிடைகள் - பாலபாடங்கள் - சிவாலய தரிசனவிதி - பெரியபுராண வசனம் என்பன இன்று பாடசாலைகளில் மறைந்துவிட்டன. புற்றீசல் போலக் கட்டுப்பாடின்றி எழுந்த மாத்திரத்தே சமயப் புத்தகங்கள் பிரசுரமாகி வருகின்றன. நாவலர் பெருமான் பணவருவாயைக் கருதி நூல்களை வெளியிடவில்லை. ஞானதானமுறையாகவே நூல்களை வெளியிட்டுள்ளார்கள். அவர் தம நூல்கள் ஆன்மீக வழிபாட்டுக்கு மிகச் சிறந்தனவேயாகின்றன. ஈழம் தந்த இலக்கணமுனி வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர், அன்னுன் இடத்தை இன்று நிரப்பி நிற்கும் வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளை, பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளைபோன்ற பெரியார்கள் இன்றும் நாவலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மரபு நெறி தவருது எழுதி வருவதையும் சொற்பெருக்காற்றி வருவதையும் காண்கின்றேம். இப் பெரியார்களைச் சைவத் தமிழ் உலகம் இன்னும் ஊக்குவித்துச் சிறந்த நூல்கள் வெளிவர முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாவலரின்

தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## "பசி" வெளியீடு

நாளை சனி (24 - 11 - 62) மாலை 4 30 மணியளவில், யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு. அல்பிரட் துரையப்பா, பா உ தலைமையில், மாதகல் செல்வாவின் சிறுகதைத் தொகுப்பாகிய "பசி" நூல் வெளியீட்டு விழா நடைபெற இருக்கிறது.

இவ்விழாவில் கலைச்செல்வி ஆசிரியர் திரு. சிற்பி, ஈழநாடு ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம், நந்தி, டொமினிக் ஜீவா, இளங்கீரன், ஐயன்ன ஈழத்துச்சோமு ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்து கொள்கின்றனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் (25-11-62 — 1-12-62)

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

குடும்ப விவகாரங்கள் மேலும் குழம்பலாகவே இருக்கும். உடல் நிலையும் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கும். அலுவலகத்தில் சச்சரவு ஏற்படும் திங்கள் மாலையையும் புதனையும் எச்சரிக்கையோடு கழிக்கவும். பணமளவில் நல்ல வாரம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,**

வார முற்பாதிப் பகுதி புதிய முயற்சிகளுக்கு ஏற்றதாக இருப்பது நிச்சயம். பண இலாபங்கள் நிச்சயம், ஆனால் குடும்பத்தகராறுகள் உண்டாம் வியாழன் வெள்ளியையும் சனி காலையையும் எச்சரிக்கையோடுகழிக்கவும்.

**மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.**

இனத்தவருடன் சச்சரவுக்கு இடமுண்டு ஆனால் எதிரிகளுக்கு இடையூறு ஏற்படும். சற்று மன நிம்மதி பெறுவீர். ஆனால் வேலை வழமையிலும் கூடுதலாக இருக்கும். இறுதிநாளை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,**

தொல்லைகள் தொடரும். உடல் நிலை பாதிக்கப்படும். வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. பொறுமை இழப்பதில் முந்திநிற்பீர். நண்பர்கள் இடரிலிருந்து உம்மைக் காப்பர்,

**சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.**

தம்பி தங்கைகள் மிக உதவுவர், எதிரிகளுக்கு இன்னலும் உமக்குப் பண இலாபமும் நிச்சயம். ஆனால் சிறு உடல்நிலைக்குழப்பங்களுக்கு இடமுண்டு.

**கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

பணமளவில் மிகச் சாதகமான வாரம். புதிய பொறுப்புக்களில் வெற்றிநிச்சயம். ஆனால் இரகசிய எதிரிகள்பற்றி எச்சரிக்கையாக இருக்கவும். சிறு உடல்நிலைக் குழப்பங்களும் ஏற்படும்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்**

திரும்பவும் ஒரு நல்ல வாரம். நிலபுலங்களால் வரும்படிகளும் நிச்சயம், எதிர்ப்பாலைச் சேர்ந்த நண்பர்கள் உதவியாயிருப்பர். ஆனால் தாய்வழி உறவினருடன் சண்டைகள் ஏற்படும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

சிறு உடல்நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு. தந்தை வழி உறவினர் மூலமான தொல்லைகளும் ஏற்படும், செலவுகள் பெருகும். ஆனால் அவற்றைச் சமாளிக்கப் போதிய வருவாயும் கிடைக்கும்,

**தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

உடல்நிலைக் குழப்பம் தொடர்ந்து இருந்துவரும் மனநிம்மதி இருக்காது அலுவலகத்தில் கலகங்களும் ஏற்படும். விபத்துபற்றிக் கவனமாக நடந்துகொள்க,

**மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,**

குடும்பநிலை தொடர்ந்து குழம்பலாகவே இருந்துவரும். புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனால் வெற்றிபெறும். பணமளவில் நல்ல வாரம்,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

தடைகள் யாவற்றையும் தாண்டிக்கொண்டு உமது பொறுப்புகளில் வெற்றியீட்ட உம்மால் முடியும். புகழும் வழக்குகளில் வெற்றியும் உண்டாம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

பணமளவில் நல்ல வாரம். புதிய முயற்சிகள் வெற்றிபெறும். ஆனால் உடல்நிலை மேலும் திருப்தியற்றதாகவே இருக்கும். மன நிம்மதியும் இருக்காது.

---

## மாவைநகர் முருகவேள் பதிகம்

[நவாலியூர், திரு, க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது.]

(முற்றொடர்)

செம்பிற் கழிம்பென்ன மருவுமா ணவமலச்
சேட்டையா லறிவிழந்தே
செய்வதுந் தவிர்வதும் தெரியாம லலையுநான்
தீமைபல புரிதலியல்பே
வெம்புமம் மலமாயை கன்மத் தொடக்கிலா
விமலநீ கருணையாலே
மிகுபிழை பொறுத்துமே னெறிகாட்டி
யாட்கொண்டு விடுவதுன் கடமையன்றே
அம்புவி தனிற்கலி யுகத்திலே கண்கண்ட
அற்புதக் கடவுணீயே
ஆற்றமுடி யாததுய ராற்றியுன் பொன்னடி
அடைக்கலங் காத்தருளுவாய்
மன்பதைக் கருள்புரிய வென்றரு ளுருக்கொண்டு
மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வாக னக்கடவுளே. 9

பொய்யற்ற கீரனுக் கருளவிலை யோதேவர்
புன்மையை யழிக்கவிலையோ
பொன்னகர்க் கிறைவன்மகன் கனவில்வந் தவனடிகள்
போற்றவருள் புரியவிலையோ
மையற் பெருங்கிரி துளைக்கவிலை யோவேலை
வற்றவே லேவவிலையோ
வாகுமுத லானவர்க் கருளவிலை யோமுனிவர்
மற்சவுரு மாற்றவிலையோ
தையற்கோர் கரம்வளர வுதவவிலை யோவுமை
தமிழ்பாட வருளவிலையோ
தண்டமிழ்ப் புகழ்கூற வருணகிரி நாதனைச்
சாவாது காக்கவிலையோ
வையத் தெமக்கருளு வதுபெரிய வருமையோ
மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வாக னக்கடவுளே. 10.

கந்தநம வைந்துமுகர் தந்தமுரு கேசநம
கங்கைதரு மைந்தாநம
கார்த்திகே யாயநம பூத்திடு கடம்புபுனை
கனகமணி மார்பாநம
எந்தைநம வீரறு புயத்தநம மன்னுயிர்க்
கீசநம நேசாநம
இமையவர்கள் தலைவநம் கன்னிமா ரிருவருக்
கினியமண வாளாநம
தந்தைநம சங்கரன் குரவநம வைங்கரன்
தம்பிநம நம்பிநம ஓம்
சரவண பவாயநம சரவண பவாயநம
சாமியுன் னபயமபயம்
வந்தனைசெய் மாதவன் பூசித்த நகுலமலை
மருவுமுயர் மாவைநகர் வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி
வேலனே மயில்வாக னக்கடவுளே, 11.

முற்றும்.

---

## பிழையைக் கண்டிக்கப்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வழியைப் பின்பற்றியவர்களாக வாழ்ந்த பயனை அடைய முடியும்.

விபூதி—உருத்திராக்கம் — சமய தீட்சை என்பனவற்றிற்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும், பாடசாலைகள் — சமயத் தாபனங்கள் தோறும் சமயக்கல்வி சிறந்த முறையில் பயிற்றப்பட வேண்டும். இவ்விடயத்தில் சைவ பரிபாலன சபையார் மிகுந்த கவனம் செலுத்துவார்கள் என எண்ணுகின்றேன்,

சமயகுரவர், நாவலர் வாழ்ந்த காலத்திலே பிறமதங்களால் சைவசமயத்திற்கு இடுக்கண் பல வந்தன. இன்றைய சூழ்நிலையிலே சைவ சமயத்திற்குள்ளேயே பல கிளைச் சமயங்கள் தோன்றி வீணை பூசலை உண்டாக்குகின்றன, இதனால் எதிர்கால மாணவர்கள் சமயத்தில் நம்பிக்கையை இழந்துவிடுகின்றார்கள்.

நாவலர் பெருமானைப் போன்று பிழை என்று கண்டவற்றை நேரிற்கண்டிக்கும் தன்னலமற்ற தியாகிகள் முன்வர வேண்டும். அப்போதுதான் சைவ சமயம் சிறந்த நெறியிலே வளர்ச்சியடைய ஏதுவாகும். நாவலர் பெருமானைப்போன்று உடல், பொருள், ஆவி மூன்றனையும் சமயப்பணிக்கே பரித்தியாகம் செய்ய அறிஞர்கள் முன்வர வேண்டும். சைவ சமய சாதனை முறைகள் இக்காலச் சூழ்நிலையிலே மிகவும் அவசியம் வேண்டியதாகும். நாவலர் பெருமான் கிறித்த மதத்தின் பிழையான கொள்கைகளைக் கண்டித்த வகையில் நின்றுவிடவில்லை. அதே நேரத்தில் சைவசமய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக நின்று உழைத்தார். சமய போதனை செய்வதற்கு ஆசிரியர்கள் பக்குவப்பட வேண்டும், சிறந்த சைவ சித்தாந்தப் பேரறிஞர்கள் மூலமாகச் சமய வகுப்புகள் நடைபெற வேண்டும். திருமுறைகள் எங்கும் ஒலிக்க வேண்டும்.

நாவலரின் வசன நடைகள், உரை நடைகள் என்பனவற்றை நமது வாழ்க்கையிலே எடுத்தாள முயற்சி செய்ய வேண்டும். ஒழுக்கம் நிறைந்த சமயக்கல்வி மாணவரிடையே நன்றாகப் புகுத்தப்பட்டால் அவர்கள் பிறந்ததின் பயனை அடையமுடியும்.

---

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 6934-ம் இலக்க வழக்கில் 1962-ம் ஆ ஐப்பசிமீ 4-ம் உ யைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1962-ம் ஆ மார்கழிமீ 27-ம் உ வியாழக்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னுற்காணும் ஆதனடாப்பின் ஒழுங்கின்படி என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

கரவெட்டி மேற்கு
1. செல்லையா வல்லிபுரம்
2. பெண் வள்ளிப்பிள்ளை

—வழக்காளிகள்,

இல. 6934,

எதிராக

கொற்றகேணு வேலுப்பிள்ளை கந்தசாமி காலஞ்சென்ற காத்திகேசு வல்லிபுரத்தின் ஆதனத்துக்குக் காரியஸ்தன் என்ற வகையில்.

—எதிராளி.

அறவிட வேண்டிய
தொகையின் விபரம்,

சித்தாரித்த தொகை:- ரூபா 890. 11-1-61 தொடக்கம் 9-11-61 வரைக்கும் ரூபா 500-க்கு 8 வீத வட்டி ரூபா 33. 10 - 11 - 61 தொடக்கம் 24-9-62 வரைக்கும் ரூபா 923-க்கு 5 வீத வட்டி ரூபா 39-88. கோட்டுச் செலவு ரூபா 230-91. மொத்தம் ரூபா 1192-79.

ஆதனடாப்பு:

1. கரவெட்டி வென்றிக்குறிச்சியிறை, வெல்லன் நெற்பர. 25¾. ஷை நெற்பரப்பு 40½. கூடிய நெற்பர, 66¼. இதில் நெற்பரப்பு 10. எல்லை கிழக்கு எதிராளிகளுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கும், தெற்கும் எதிராளிக்குடைய ஆதனம், மேற்கு முருகேசு நடராசாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும்.

2. கரவெட்டி குறுளிக்குறிச்சியிறை. வாரியத்தனை நில.பர. 16, ஷை தோட்டம் 2. இப்பிரிவுகளில் தெற்குப்புறமாக 2/3 பங்கில் வடக்குப்புறமாக நில. பர. 2-ல் தெற்கரைவாசியில் மேற்கரைவாசிக்கு ஆட்சிப்படி நில. பர ½. எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்குடைய ஆதனம். வடக்கும் தெற்கும் கந்தப்பு முருகேசுவுக்குடைய ஆதனம், மேற்கு வல்லிபுரம் பொன்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும் முழுக்காணிக்குட்பட இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும்.

S. C. Kanagasabai
கொம்மிசனர்

புலோலிகிழக்கு, 13-11-1962.
M 188, 23-11-62.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
ஈச்சமட்டை றோட்டு இல. 45.
1. இராணி பத்மாவதி
சிறீநந்தன் ஸ்ரீ, இராமலிங்கம்
2. சதாசிவம் சிறீநந்தன்

—வழக்காளிகள்,

இல. 2238

எதிராக

சாவகச்சேரி தற்போது மடண்டவலா, மாத்தளை.
1. கந்தையா கனகரத்தினம்
2. பெண் நாகமுத்து

—எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2238-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணியை 1962-ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி)மாதம் 22-ம்திகதி (22-12-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 3787-ம், இதில் ரூபா 3000-க்கு 23-7-61 திகதி தொடக்கம் 13-2-62 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 282-46 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக்கோவிற்பற்று சாவகச்சேரியிறை "திடபாலசிங்கத்தின் வளவும்" மறு பிரிவுகளும் நிலைப்பரப்பு 20-ம் குளி 16-ம் பனைகளும், தென்னைகளும், வீடுகளும் கிணறும் மற்றும் பயிர்களும். எல்லை கிழக்கு சின்னப்பா பெண் பூரணத்தின் ஆதனம் வடக்கு நயில்ஸ் பெண் ஆச்சிமுத்துவின் ஆதனம். மேற்கு றோட்டு தெற்கு காலஞ்சென்ற வீ. கனகரத்தினத்தின் பிள்ளைகளுக்குரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு F 317/234.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer

தெல்லிப்பழை, 7-11-1962.
M. 192 23-11-62

---

## முள்ளியவளை நிருபர்

ஸ்ரீ. சங்கர சுப்பிரமணியசர்மா அவர்கள் 'இந்துசாதனம்' முள்ளியவளை நிருபராகவும், விற்பனையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. சிவக்கொழுந்து
சின்னத்துரை
யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி இல. 39.
2. சிவக்கொழுந்து சிவஞானம்

வழக்காளிகள்

இல. M. B. 4726

எதிராக

யாழ்ப்பாணம் தாவடி
1. சின்னத்தம்பி தாமோதரம் பிள்ளை
2. பெண் மீனாட்சிப்பிள்ளை

-எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 4726ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக காணிகள் 1962 ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 14-ம் திகதி (14-12-62) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 9212-50 சதம் இதில் ரூபா 5000 க்கு 28-3-62 திகதி தொடக்கம் 30-7-62 திகதி வரைக்கும் 100 க்கு 12 வீதவட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 302-55 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற்கோவிற்பற்று தாவடியிறை பள்ளன்சிமாவும் மறுபிரிவுகளும்சிமத்தியும்" நிலப்பரப்பு ஏழு (7ம்) வீடுகளும் பயிர்களும் கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு ஆறுமுகம் நமசிவாயகத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு ஆறுமுகம் கைம்பெண் சின்னத்தங்கத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். இதடங்கலும்.

2. மேற்படி தாவடியிறை "மரியபுலம்" நிலப்பரபு ஐந்து (5ம்) வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு சிவப்பிரகாசம் பெண் யோகம்மாவின் ஆதனம். வடக்கு வேலுப்பிள்ளை கந்தையாவுக்கும் பெண் இரத்தினம்மாவுக்குமுரிய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்குக் கைஒழுங்கை. இதடங்கலும்

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer & Licensed Auctioneer.

தெல்லிப்பழை, 14-11-1962.
M 189 23-11-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டிலே
கட்டுடை
1. செல்லத்துரை
கனகரத்தினமும்
2. பெண் மங்கையர்க்கரசியும்.
-வழக்காளிகள்.
வழ இல. M. B. 4200
எதிராக
சிறுவிழான் இளவாலை
சீமாம்பிள்ளை ஜோசேப்
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4200 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்காணும் ஆதனம் 1962ம் ஸு மார்கழி மீ 27ந்உ வியாழக்கிழமை(27-12-62) பிற்பகல் 4 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 6970ம் மேலும் ரூபா 5000 க்கு 17-8-61 தொடக்கம் 28-5-62 வரையும் 11 வீத வட்டியும் கூடியதொகைக்கு 28-5-62 தொடக்கம் இறுபடும்வரையும் 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 269-79ம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை இறை 'அணிஞ்சிலடி'' நீ பர (1) ஒன்றும் வீடும் தெற்கெல்லையில் கிணற்றுப் பங்கும் பயிர்வகைகளும் மற்றுமதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு முகம்மதுஇப்ராஹீம் அல்லாப்பிச்சையினுதனம். வடக்கு செம்மாதெரு ஒழுங்கை. மேற்கு முகிபதீன் பள்ளிவாசலாதனமும் காலஞ்சென்ற பக்கீர் தம்பியின் உரிமைக்காரனினுதனம். தெற்கு முருகேசு இராமனுதனினுதனம். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 16-11-62
M. 193 23-11-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வேலணை கிழக்கு
விளுசி வயிரமுத்து
— வழக்காளி.
எதிராக
இல M B 3929
1. வேலணை கிழக்கு குழந்தை
வேலு மார்க்கண்டுவும்
2, ஷையூர் பெண் மனோன்மணி
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3929ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1962ம்ஸு மார்கழி மீ 17ம் திகதி திங்கள் கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 366-ம் ரூபா 200க்கு 1-3-1961 தொடக்கம் 20-2-62 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமானவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 145-88 சதம். கோட்டுச் செலவில ரூபா 75 கொடுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கிறை ''மொாந்திக்குவடக்கு வெள்ளிடை'' பர. செ. இல. இருபத்திரண்டரை (பர. செ. இல. 22½) பனைகளும் வீடும் எல்லை கிழக்கு அம்பலவாண சுவாமிகோவிலுக்குரியவாதனம்.வடக்கு ஒழுங்கை. மேற்கு மயில்வாகனம் பெண் ஞானம்பிகைக் குரிய வாதனம். தெற்கு ரோட்டு. இதடங்கலும், இதன் பதிவு C 261/49.

காரைநகர்:
1962-ம்ஸு கார்த்திகைமீ 29-ம்உ
வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
M 186 23-11-62.


## ஆதிபகவன்

1-ம் பக்கத் தொடர்ச்சி

என்? ஆழ்கடல் நீரை நீக்கி அலர்கதிரோன் எழுந்தால் நிலந் தெளியும்; வளங்கொழிக்கும்; உடல் வளரும்; மண்ணில் வழி கண்டு மக்கள் நடந்து திரிவார் அவ்வளவே. ஆனல் எதிரில் வருவார்க்கு இடங்கோடார் இடரே தருவார் எத்தனைபேர். கண்கூடாப்பட்டது கேடெனினும் கருத்துட் கோள்ளாது துயரே உழப்பார் உளரன்றே! வழிகேட்டுத் துயர்க்கடலுள் ஆழ்ந்து வருந்துகின்றரே என்? நிலந்தெளிந்தும் மனந்தெளியவில்லை உடல் வளர்ந்தும் உளம் வளரவில்லை, புறத்தே ஒளி போங்கியதுபோல் மக்கள் அகத்தே ஒளி பொங்கவில்லை என்பது தெளிவன்றோ?

அவ்வாறாயின் அகவிருளைக் கொடுப்பவர் தான் யார்? அவரே எழுத்தறிவித்து இழிதகைமை தீர்க்கும் நல்லாசிரியர் என்று சொல்லவும் வேணடுமோ? ஆசிரியர் துணை பெற்று மக்கள் மனம் மாசகன்றால் அவர்கள் கண்ணுடையராவார்; ஆவதறிவார்; அற்றங்காப்பார்; அம்மட்டோ? தாமின்புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவர். வையகம்வாழத் தாமும் வாழ்வர். ஆசிரியரால் அறிவொளி பெற்றிலரேல் மக்கள் கண்ணிணைகள் புண் எனத் தகுவதாகும். அவரெலாம் விலங்கொடு அணையராய் நலங்கெட்டழிந் தொழிவர். ஆதலின் கணக்காயர் இல்லாத காலமும், கதிரவன் இல்லாத காலமும் ஒன்றெனக்கொள்க.

இதுகாறும் கூறியவற்றால் வையக வாழ்க்கை அகம புறம் என இரு பிரிவுடையதாதலும், அகமும் புறமும் ஒளி பெற்றாலன்றி வாழ்வு சிறப்புறாமையும் அவை சிறக்க ஒளி தருவார் ஆசிரியரும் கதிரவனும் என இருவரேயாம் என்பதும் அனைத்துலகிற்கும் அலர் கதிரோன் எவ்வளவு தேவையோ அவ்வளவிற்கு ஆசிரியரும் இன்றியமையாதவர் என்பதும் கண்டோம்.

ஆசிரியரும் கதிரவனும் வாழவழிகாட்டுதலால் வாழ்முதற் பொருளே யாயினும் முழுமுதற் பொருளாதல் இல்லை. என்? அவருள் ஒருவரே நின்று உலகை உய்வித்தல் இல்லையாதலின். எனவே முதற்பொருளைக் கூறவந்த வள்ளுவர் ஆதிபகவன் எனப் பொருட்சிறப்புற ஓதினர் பகவன் என்ற சொல் கதிரவன் என்றும், ஆசிரியன் என்றும் பொருள்தருவது. அவ்விருவர்க்கும் முதல்வனே முழுமுதலாவான் என்பதே வள்ளுவர் கருத்தெனல் தகுவதாகும், ஆதி பகவன் என்ற அத்தொடர் கதிரவனுக்குக் கதிரவன், ஆசிரியனுக்கு ஆசிரியன் என்று பொருள் தருதலைப் பொதுமைவேட்ட தமிழறிஞர் திரு. வி. க அவர்கள் திருக்குறள் விரிவுரையிலும் காண்க,

முடிவாக ஆதிபகவன் என்ற அருந்தொடர் அருக்கனிற் சோதியமைத்த ஆலமர் கட.

## அங்கும் வேண்டாம் இங்கும் வேண்டாம்

—0—



**பெரியவர்:** என்ன வெலிமடை அங்கத்தவரைப் பாராளு மன்ற மண்டபத்திலிருந்து வெளியேறச் சொன்னார்களாமே!

**விகடன்:** வெளியில் நிற்பவர்களும் அங்கிருந்தும் அவரை வெளியேறச் சொன்னல்?

**பெரியவர்:** கோனர் சீனவுக்குச் செல்வதுதானே.

## கல்லும், கனியும்

1-ம் பககத் தொடர்ச்சி

செய்யும்போது அவனது உள்ளம் கல்லினும் கடினம் பெற்றது. அதனல் அவன் பல கொடுமைகள் செய்தான் முன்செய்த தவத்தினலே இறைவன் அருளைப் பெறுங் காலம் வந்தது. முருகப்பெருமானின் முன்னிலையில் அவனுக்கு அகந்தைபோய் போதம் புகுந்தது. அப்போது அவன்,

''பெருகிய திவண்பாலன்பு
பிறந்தன தமியேற்குள்ளம்
உருகிய தென்புதானும்
உலைமெழு காகுமன்றே''

என்று கூறுகிறன். இந்த நிலையையே தாயுமானவரும் 'நீருனவனல்மூட்டியே கனிவு பெற உள்ளுருக்கி'' என்று கூறுகிறர்.

கல், நீரில் ஆழ்த்தும். மனமாகிய கல்லே கனியாக மாறும்பொழுது துன்பநீரில் ஆழ்த்தாது ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தும். கல்லைக் கனியாக்கிய வித்தையையும் அதனைத்தான் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்ததையும் ஓர் அம்மானைப் பாடல் மூலம், நம்மை உய்த்துணர வைக்கிறார் மணிவாசகர்.

''கல்லாமனத்துட் கடைப்பட்ட
நாயேனை
வல்லாளன் தென்னன்
பெருந்துறையான்பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனி ஆக்கித்
தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த
வேதியனைத்
தில்லை நகர்புக்குத்
திருச்சிற்றம் பலம் மன்னும்
ஒல்லை விடையானைப்
பாடுதுங்காண் அம்மானாய்''

——


## அரசியல் அலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாத எந்த இயக்கமும் தெய்வப் பண்புகளுக்கு ஊட்டங் கொடுக்காமற குழி தோண்டும் எந்த சக்தியும் அளவிறந்து ஆவதுபோலக் கெடுவது நிச்சயம். ——

வுனையும் உணர்த்தி நிற்றல் சிவனடி மறவாச் செம்மையாளர்க்குச் சிந்தைநிறை பேரின்பந்தருவதேயாம் அன்றோ?

(ஞானசம்பந்தம்)




# பேரின்பமெய்திய பெருநாளில்!

[சைவபரிபாலன சபையின் நாவலர் மண்டபத்தில் சென்ற 19-11-62 இல் நடைபெற்ற நாவலர் விழாவில், பண்டிதமணி வித்துவான், நடப்பையபிள்ளை, சைவப்புலவர் வ. கந்தசாமி, பொன். அப்புக்குட்டி, சைவப்பிரசாரகர் கந்தையா, பண்டிதர் சங்கரப்பிள்ளை, கல்யாணசுந்தரக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய மகாநாட்டிற்குத் தலைமை தாங்கிய பண்டிதர், பிரம்மஸ்ரீ வ.மு. இரத்தினேசுவரஐயரின் தலைமைச் சொற்பொழிவுச் சுருக்கம்]

இன்றைய தினம் ஒரு விசேடமுடைய நாள். உலகத்தில் அறம் வளர அவதாரங்கள் நிகழும். பொதுவாக கிருட்ணபரமாத்மா பகவத்கீதையில் தருமத்தை நிலைநாட்டத் தாம் யுகங்கடோறும் அவதரிப்பதாகக் கூறினர் நமது பரமசிவப் பெருமான் திருவருளால் சமயகுரவர்கள் அவதரித்துச் சமயவுண்மைகளை அநுட்டித்துக்காட்டினர்கள்; அற்புதங்கள் பல செய்தார்கள். ஐந்தாம் குரவர் என்று கூறத்தக்க ஒருவர் அவதரித்தார். அவர்தான் ஆறுமுகப்பெருமானின் திருநாமமாகிய ஆறுமுகம் என்ற பேருடையவர். அவருடைய அவதாரத்தினல் கிறீத்தமத போதனைகளிலுள்ளம்வைத்த பலர் சைவசமயிகளானார்கள், ஆறுமுகனர் திருவாவடுதுறை ஆதீனத்துக் குருமூர்த்திகளின் பேரருள் பெற்று முதல் நாவலர்ப்பட்டம்பெற்றவர். இலக்கண இலக்கிய சமய சாத்திர விற்பன்னர், சைவப்பிரகாச வித்தியாசாலை நாவலரவர்களை நினைப்பித்து விளங்குகின்றது. அதில் ஒரு சிறிது கல்வி பயின்றமையால் நான் இங்கே சில கூறமுடிந்தது. தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழி வன்மை நாவலருக்கு இருந்தது. தமிழும், சைவசமயமும் ஆகிய இரண்டையும் இரு கண்களாக நாவலர் பரிபாலித்தார். தமது வாழ்வை உத்தியோகத்தில் செலுத்தாது நமது மக்கள் முன்னேற வேண்டுமென்றே வாழ்நாள் முழுதும் பணி செய்தார். இப்படி அரிய சேவை செய்த பெரியாரை நினைவுகூர்வது மிகவும் பாராட்டத்தக்கதாகும். மணிவாசகப்பெருமானின் பேரின்ப நட்சத்திரமான மகமே நாவலர் பெருமான் பேரின்ப மடைந்த நன்னளாகும். அதுதான் இன்றைபவிசேடம் அறிஞர்கள் உடங்கியாசத்தைக்கேட்டு இன்புறுவோமாக.


யாழ்ப்பாணம்
## — ஐக்கிய இலாப நிதி —
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள ''நாஷனல்'' வங்கியிலும் ''இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 23-11-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org